




ஓலை 101| ஓசை 224| டிசம்பர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து**

## பொருள்

**ஒரு பிறப்பில், ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால், அஃது அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்பு உடையது.**


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# அண்ணாமலையார் தீபம்



**1.கலிவிருத்தம்.**

**மா விளம் விளம் விளம்.**

இல்லில் தீபமே இன்னொளி தந்திட
சொல்லில் நாளுமே செம்மையைக் கூட்டிட
அல்லல் நீங்கிடஅஞ்செழுத் தோதியே
இல்லில் தீபமே இல்லவள் ஏற்றுக.

**2.நேரிசை வெண்பா.**

ஒளியால் உடனே ஒழியும் கருமை
களிப்பால் மனதிலே காழ்ப்பும்-இளியும்
நலிவும் அகன்றிட  நற்றிறம் சூழ்ந்தே
வலிமை நிறைக்கும் வளம்.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை


# ஈனக்குரல்

மீன் செதில்களாய்
சிதறுற்றிருக்கும்
உன் நினைவுகளை
அள்ளிக் கொண்டுப் போ.

நீ வராமல்
காலம் தாழ்த்தும்
சிறு தாமதத்திற்கு
ஒரு கூடையளவு
நிரம்பியிருக்கிறது
நீ வந்து எடுத்துப்
போவாயேயானால்
அதுவென் பாக்கியம்.

என்னைச் சுற்றிலும்
கரையான் புற்றென
குவிந்திருக்கும்
உன் நினைவுகளால்
மூச்சுச் திணறத் திணற
நான் மடிய நேரலாம்.

விரைந்து வா
பெண்ணே.
குரல் பிறழ்வுற
உன்னை அழைப்பதும்
உன் செவிக்குச் சன்னமாய்
ஒலிப்பதும்
என் ஈனக்குரல் தான்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# சிந்தனை சிதையும் போது

சிந்தனை சிதையும்போது
சினமே சீற்றம் கொள்ளும்.
சிரத்தில் ஏற்றி சிரத்தை எடுத்தாலும்
சிக்கலில்தான் முடியும்


பேசும் மொழிகளெல்லாம்
புரியாத புதிராய்.
புதுமைகள் பேசும்
சித்திரக் கணங்களாய்

கருத்தாயும் கருத்துக்கள்
இதயத்தை எட்டாமலே.
முயன்று முட்டி
மோதிக் கொள்ளும்

என்னதான் நடக்கிறது
எதைத்தான் என செய்வதறியாது.
பித்துப் பிடித்து
அலைந்ததான பொழுதாகிப்போகும்

விரும்பாமலே விலங்கிடப்பபட்ட
விசித்திரமான பொழுதுகளாய்.
விம்மியழ நேரமில்லாத
நிம்மதிதொலைத்த நினைவுகளில்

அலைமோதும் அத்தனையும்
இதயத்தை இடித்துவிட்டு.
ஒருநிமிடமேனும் நின்றுவிட்டே
நிலைமாறிச் செல்கிறது



சுற்றும் தலைக்குள்
கற்களை நிரப்பி.
பாறாங்கல் அடுக்கும்
பாரமான பாரதூரங்கள்

பழையதும் புதியதும்
போட்டி போட்டு.
பதுங்குகுழி தேடுகிறது
என்மெல்லிய மனதுக்குள்ளே

கவிஞர் சேஹூ மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# சீவகசிந்தாமணி (ஆறு)

மணியாழி அரசு முத்திரை பதித்தது
அணிவித்தாள் குழந்தை கையில் விசயை
கனிவோடு மறைய நின்று பார்த்தாள்
துணியில் கிடந்த மழலை அழுதது .

கந்துகன் வணிகன் வந்தான் அவ்விடம்
வந்தவன் மகனை இழந்து தவிப்பவன்
சொந்தம் என இருந்த ஒரேவாரிசு
நொந்த மனதுடன் கவலையில் இருந்தான்


குழம்பி இருந்தான் ஈமக்கடன் முடித்து
மழலை அழுகுரல் ஓங்கி கேட்டது
விழைந்து சென்றான் அந்த இடம்
அழகான ஆண் சிசுவைக் கண்டான்

வாரி எடுத்து உச்சி முகர்ந்தான்
மார்பில் அணைத்து சுற்றி நோக்கினான்
யார் பெற்ற பிள்ளை இவன்
பார்த்தான் கையில் அரசு முத்திரை

தம் வீட்டுக்கு பிள்ளையுடன் வந்தான்
''எம் இல்லாளே இதோ பார்
நின் மகன் சாதலின்றி தப்பினான்
நிம்மதி கொள் இதோ வந்துவிட்டான்.''

இக்காட்சியைக் கண்டாள் விசயை
அக்கணமே தன் கவலை மறந்தாள்
தக்கவரிடம் தன் மகன் சேர்ந்தான்
பக்கமாக தவப்பள்ளியில் இணைந்தாள்

மன்னன் வானுலகம் சென்று விட்டான்
தன் உடலில் ஆபரணங்கள் இழந்தாள்
முன் கைகள் வளையல் களைந்தாள்
இனிய வண்ண ஆடைகள் காவியானது




மயானத்தில் அழுகுரல் தொடர,ஒலித்தது
மாயமான அசரீர் "சீவ" என்றது
தயாபரன் "சீவகன்" பெயர் சூட்டினான்
பயபக்தியுடன் கந்துகன் மனைவி சுநந்தை
( தயாபரன் : அருள் மிக்கவன் )

அந்தக் குழந்தையை பரிவோடு கொண்டாடினர்
எந்தக் குறையும் இல்லாமல் வளர்ந்தான்
கந்துகன் மகனான் வணிகன் இல்லத்தில்
அழகு மிகுந்து சீவகன் வளர்வானானான்

தொடரும் ...

கவிஞர் ந. திருக்காமு

# பேரன்பின் இருப்பு

அதீத நேசப்பிரவாகத்தில் மூழ்கடிப்பது
அலாதி இன்பமழை விசிறுவது
பேரன்பின் இருப்பை எத்தி வைப்பது
பிரியங்களின் சொர்க்கத்தில் வாழவைப்பது
அது நேசத்தை விட பலபடி உயர்ந்தது
ஆகாயத்தினைத் தொடும் கைகள் தருவது
உன் தேடலின் தருணங்கள்!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# இதயத்துள் முதல் மழையாய்

அமுதூறும் அதரமே
அழகானச் சித்திரமே
ஈர்த்திட்டாய் பார்வையாலே
இணைந்திட்டேன் உனனுள்ளே

இதயத்தின் துடிப்பே
எழிலான வனப்பே
நித்தமும் நினைவுகளாலே
கரைகிறேன் உன்னாலே

கனவும் இதமாகுது
காரிகையுன் வரவாலே
நித்திரையிலும் முத்திரை
பதிக்கிறாய் அன்பே

இனித்திடும் செவ்விதழாளே
இனிமையும் பெருகிடுதே
காதலின்பம் கூடுதடி
காதலி நீயானதாலே

தடாகத்துத் தாமரையாய்
மிதக்கிறேன் கண்ணே
புன்னகைப் பூத்திட்டப்
பூவாய் மலர்கிறாயே



எந்தன் நெஞ்சில்
மின்னல் கீற்றானவளே
தேன்மழை பொழிகிறது
தேவதையின் அணைப்பிலே

வைரமாய் சொலிக்கிறாய்
விழிகளில் வியப்பே
காந்தர்வக் கன்னியே
கவர்ந்திட்டாய் என்னையே

இதயத்துள் முதல்
மழையாய் நனைத்தவளே
முப்பொழுதும் கலந்திருப்பேன்
வாழ்வும் இன்பமாகிடவே

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# அறிவியல் ஆயிரம்

மாய உலகம் கையில் அடங்க
வியத்தகு அறிவியல் வேகமாக வளர
நானும் நீயும் விதி விலக்க
நாளுக்கு நாள் நோய்கள் பெருக
மருந்துகள் புதிய வரவாய் வர
அறிவியலும் வளர்ந்துக் கொண்டு போக
உலக நாடுகளும் அறிவியலை வளர்க்க
இளம் மருத்துவர்களும் புதிதாக உருவாக
பழைய சாதமும் சின்ன வெங்காயத்திற்கும்
ஏதுவும் ஈடாகாதே முன்னோர்கள் அதை
உண்டு நீண்ட நாள் வாழ்ந்தார்களே
நவீன உலகம் நவீனமயமாக்கப்பட்டதால்
வியாதிகளும் பெருகி கொண்டே போக
நாமும் புதிய மருந்தை தேடுகிறோம்
பலன் கிடைத்ததா பணம் போனதா
அதிர்வலைகள் வந்து நம்மை அடிக்க
புரியாத உலகில் வாழ்ந்து திணறுகிறோம்



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

பிறப்பு நாட்களையும்
சிறப்பு நாட்களையும்
அவ்வப்போது
நினைவு கூருகிறேன்!
எனது நினைவு நாளைத் தவிர.
*****

இப்படி வாழணும்.
இப்படி வாழக்கூடாது .
நம்மை நம்பியவர்களுக்காக..
நாம் வாழ வேண்டும் .
ஒவ்வொரு இறப்பு வீட்டுக்கும்
சென்று.
*****

அஞ்சலி செலுத்தி வரும் போதெல்லாம்.
என்னுள் பதிந்து விடுகிறது.
******

சொத்து இருந்தால்
சுகம் இருக்காது.
சுகம் இருந்தால்
சொத்து இருக்காது.
இரண்டையும்
சமப்படுத்தும் போது.
நாம் இருப்பது சந்தேகமே.



# நீ என்ற தூரத்தில் தவிக்கிறேன்

வெகுநேரம் வரவில்லை
ஆழியில் மூழ்கி எடுத்த
அழகிய முத்தே!

அன்று ஒரு நாள் கடற்கரை ஓரத்தில்
நம் கண்ட காட்சி நிஜம்தானோ ?
ஓர் ஆணும் பெண்ணும் அந்தக்
கடற்கரையில் கப்பல் ஓரம்போய்
மறைவிடம் தேடிய காதல் காவியம்
தொன்ம அழகு ! இன்னும் பேசுது .

இனியும் எப்பொழுது அந்தக் காட்சிக் காண்பிக்க
இனி மீட்டெடுக்க முடியாத கடைசித் தருணமோ?
என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில்

செஞ்சிக் கோட்டைக்குச் சென்று இருந்தேன்
அங்குள்ள ஒவ்வொரு மரத்தின் அடியிலும்
காதலன் காதலியும் மடிச் சாய்ந்திருந்தன.

இப்படி வழி நெடுகிலும் வரவேற்புச் சின்னங்களாய்
இருவரின் உலகம் கரம் பிடித்த பூக்கள்
திரும்ப மீட்டெடுத்தது வெட்டுண்ட மரத்தின்
வீழ்ந்த துண்டுகளை அலங்கரிக்க.

தூரத்தில் போன சில நாட்கள்
பல பொழுதுகள் கடத்தியது
ஒத்துப் போன மனம் பிரித்துப் போனதென்று!

கொட்டி தீர்த்த பெருமழை
மண்ணில் அல்ல ! என்னில்
கையசைத்து வழியனுப்பிய காதலின் நினைவு .



எவ்வித அசைவமின்றி
உணவைத் தின்னும் எறும்புப் போல
தினமும் தின்னுகிறது
அவளின் ஞாபகங்கள்.

கள்ளத்தனமாக பெயர் சூடினேன்
பால் வடியும் முகத்தில்
நானும் அவளும்.

கவிஞர் தே. செ. பிரகாஷ், செஞ்சி

# புல்லறிவாண்மை

## அதிகாரம் : 85

வறுமையுள் கொடுமையாதெனில்
அறிவிலா தன்மையேயாம்.
வேறெந்த வறுமையையும்
வறுமையாய் உலகங்கருதாது.

அறிவிலாதொருவன் மகிழ்வுடன்
பொருள்கொடுத்த லென்பது.
அப்பொருளை பெறுவோரின்
நல்வினைக்கு ஆனதேயாம்.


அறிவிலார் தமக்குத்தாமே
உண்டாக்கும் பெருந்துன்பங்கள்.
பகைவரெவராலும் அவர்க்கு
செய்யமுடியா அளவினதாகுமாம்.

அறிவில்லாதவன் தனக்குத்தானே
அறிவுடையோனாய் மதிக்கும்.
அறிவிலா தற்பெருமையே
புல்லறிவு எனப்படுவதாம்.

அறிவிலாதோர்தாம் கல்லாததை
கற்றார்போல் மேற்கொண்டாடல்.
கற்றுணர்ந்த பழுதில்லாபொருளிலும்
அவர்க்கு ஐயமுண்டாக்கும்.

தன்குற்றம் அறிந்து
நீக்காது தம்முறுப்புகளை.
ஆடைக்குள் மறைத்திடல்
அறிவற்ற தன்மையாம்.

அரியமறைபொருள் அடைந்தும்
அஃதை மனமிருத்திக்காவாது.
அறிவிக்கும் அறிவீலன்
தனக்கேதான் தீங்கிழைப்பான்.




பிறர்கூறியும் நன்மைபுரியாது/
தானுணர்ந்தும் தெளியாத.
அறிவிலான் பிறர்க்கென்றும்
பெருநோய் போன்றோனாம்.

அறிவிலாதோனை உயர்த்துவோன்
அறிவற்றோனாயும் அறிவில்லானோ.
தானறிந்த சிற்றறிவால்
அறிவாளியாயும் திகழ்வான்.

உலகோர் உண்டென்பதை
இல்லை என்போனை.
உலகில்காணும் பேயெனக்கருதி
உலகால் ஒதுக்கிவைக்கப்படுவான்!

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# மக்கள் படை

முரண் களைந்து இணங்க
களம் அமைய வில்லை.
முற்றுப் பெறா வன்மம்
தீர்ந்து போக வில்லை.

கொப்பூழ் குருதி வெடிக்க
கலக மிடும் கயவர் திரள்
தெவ்வர் செருக்கு அறுத்து
தென்னவன் விதையாக வீழ்ந்தான்

தினவெடுத்து திரியும் தீயோர்
சிறகு முறிக்க திரளும்
செந்நெல் மக்கள் படை
தீரா பகை முடிக்க.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலை
தொகுத்தே உரைக்கின்றன அறநூல்கள்
உடம்பை வளர்த்தேன்
உயிர் வளர்த்தேனே என்றார் திருமூலர்
வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்
இங்கு வாழும் மனிதருக்கு எல்லாம்
பாரதியின் வைர வரிகளைச் செயல் ஆக்குவோம்.
சாதி மதம் பாராமல் மனிதனைப் பிணிப்பது
பசி என்னும் பிணியே
பசிப்பிணி போக்கும் மருத்துவராம் வள்ளலாரை
நினைவு கூர்ந்து வழங்குவோம் அன்னதானம்
பசி வந்தால் பத்தும் பறக்கும் பழமொழி
பசிக்குச் சோறிட்டால் வாழ்வு சிறக்கும் வழிவழி
வாய் வாழ்த்தாவிட்டாலும் வயிறு வாழ்த்தும்



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# கன்னல் மொழியே

பா வகை: குறள்வெண் செந்துறை

ஒழிப்பதை அறவே ஒழிப்பாய் வாழ்வில்
மொழிவதைச் செறிவாய் மொழிவாய்த் தமிழில்!

அறிவின் ஆற்றல் அழகாய் மிளிரும்
நெறிமைச் செய்தே நெஞ்சம் ஒளிரும்!

தாய்மொழிப் பேசிடத் தயக்கம் ஏனோ?
வாய்வழி மணந்திடும் வையம் தானே!

கற்றார் வாழ்விலும் கனிவு கண்டிடும்
பெற்றார் மனத்திலும் பெருமை சேர்த்திடும்!

பட்டம் பெற்றே பாரினில் சிறந்திடில்
கட்டியங் கூறிடுக் கன்னல் மொழியில்!



கவிஞர் சி. வித்யாகார்த்திக், பழநி

# வானம் எங்கும் உன் பிம்பம்

ஒற்றை ஒளிக்கீற்றாய்
வானமெங்கும்
வெளிச்சமேற்றியது அந்த
வெண்ணிலவு
சுற்றிச் சுற்றி வந்த
நட்சத்திரமாய் நான்
ஓர் கணத்தில் தேய்ந்து தேய்ந்து
நிலவு காணாமல் போக
வழி தவறினேன்
வாழ்க்கை மாறினேன்
வார்த்தை மறந்தேன்
தேடிதேடி அலைந்தேன்
தேவதை ஒன்றை கைப்பிடித்தேன்
எதிர்பாராத நாளொன்றில்
கண்ணாடி பேழையில்
மீண்டும் அவளது பிம்பம்
மீண்டும்
என் வானமெங்கும்
வெளிச்சமாய் அவள்



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# மாற்றப்படுகிறது கல்வி

ஈகை ஈன்றி ஏட்டில் ஏற்றி
தோகை துயில் கொள்ள
தூய இன்பம் தூற்றி கொடுத்து
பழி வந்து படி மீது அமர்ந்து பாடம் கற்பிக்கிறது
கற்பித்த கைகளை கற்களைக் கொண்டு
நறுக்கி கற்பவன் காக்கிறான்.
தூய இன்பம் தூற்றி கொடு என உரக்கச் சொல்ல
உரைகள் ஊக்கமாகி கற்பவன் மெருகேருகிறான்.
அரவணைப்பு அற்றவன் ஆகிறான் கற்றவன்
காலங்கள் செல்ல செல்ல
பாடசாலை மெல்ல மெல்ல
மணலோடு ஓவியம் தீட்டுகிறது அனலாக
பாட்டனே பகுத்தறிவோடு பக்குவமாகிறான்
படித்தவன் தொகுத்தறிகிறான் பட்டங்களை
சட்டங்கள் சாதகமாகி பாதகமாகிறது கற்பவனுக்கு
பட்டம் பெற்றவன் பட்டறிகிறான் கற்பவனிடம்
இது சரியா அல்லது கல்வி நீதியா?
சந்ததி சமூகமே விழித்துக்கொள்
மரபுகளை மதிக்க வேண்டுமே தவிர மறக்கக் கூடாது
மரபு என்றும் ஆசானை மதி உன் விதி என்னும்
ஏட்டை மாற்றும் செங்கோல் அவனிடமே உள்ளது
தவறுகளை ஏற்று நட
தடுக்கப்பட மாட்டாய்
தரையில் அமர பழகு
தவறி விழ மாட்டாய்
சந்தித்தே ஆக வேண்டும் சோதனைகள்
பின்பு தான் பிறக்கும் சாதனைகள்



கவிஞர் இரா மணிகண்டன், வங்கனூர்

# நாடோடிகள்

தெருவோர குடிசைகளில்
வறுமையின் நிறங்களாய்

கால்கள் போகும் தூரங்கள்
பயணிக்கும் துயரங்களாய்

வண்ணங்கள் வாரி இறைக்கும்
கருப்பு வெள்ளை காயங்களாய்

முகவரி தெரியாத முகங்களின்
முகமூடி அடையாளங்களாய்

வறுமையை தினந்தோறும் தின்று
வாழ்வை தொலைத்து நிற்கும்
சோகங்களாய்

தன் குடும்பம் காக்க வீதிகளில்
புழுதியாய் பறக்கும்

நாடோடிகளின் எதிர்கால
கனவுகள் விடியாத

விலாசங்களின் கிழிந்த
போன பக்கங்களாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# நினைவுகள் மறப்பதில்லை

ஆழ மூச்செடுத்து
அன்று கடந்து போனதை
ஆயுசு வரை நினைக்க
ஆகாதென்று அடிமனதின்
ஆழத்தில் பூட்டி வைத்ததாய்
அறியாமல் பேதை அவள்
அலட்சியமாய் கடந்திட!
அழிந்திடாத அவலங்கள்
அவள் கண்ணெதிரே தினம் வந்து
ஆட்டம் போட! அந்நினைவுகளை
அடக்கி ஆள வழியில்லாமல்
அழுது கரைகிறாள்!
அணைத்து ஆற்றுப்படுத்த
ஆளில்லாமல் அவளை
அவளே தேற்றி எழ
ஆயுசு போதாது அவளுக்கு!
அடியோடு மறக்க இயலா
அர்த்தமற்ற நினைவுகள்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# நெஞ்சு பொறுக்குதில்லை

நெஞ்சு பொறுக்குதில்லை பராபரமே!
நெஞ்சு பொறுக்குதில்லை.

ஒரு வேளைச் சோற்றுக்கு
ஓராயிரம் அடி வாங்கும்
ஒண்டிக்கட்டை அவனைக் காண்கையில்.

அன்னை என்று அழைக்க
ஆகாரம் கொடுக்க ஆளொன்றும்
இல்லா அபலையை அறிகையில்
நெஞ்சு பொறுக்குதில்லை!

உள்ளொன்று வைத்து இங்கே
புறமொன்று பேசுவார் கண்டு
பொசுக்கி விட அலைகிறேன்
நசுக்கி விட ஆயுதம் ஒன்று கேட்கிறேன்.

காதல் என்னும் ஆயுதம்
கடும் அரவத்தின் விடமாய்
ஆயிரம் ஆயிரம் மானுடரைக்
காவு வாங்கியும் வெறி கொண்டு
அலைவது கண்டும் என்
நெஞ்சு பொறுக்குதில்லை பராபரமே!

பெண்ணென்ற தேவியைப் பொம்மையாய்
இருப்பவர் எல்லாம் வைத்து
விளையாடும் வல்லமைதான் என்னவோ?

படிக்கும் சிட்டுக்குருவி அதன்
தலையில் பனம்பழத்தைச் சுமக்கிறது
குடிகாரத் தந்தையின் உழைப்பால்,
குன்றியும் போகவில்லை அது
ஆண்டுகளாய் பனம்பழம் சுமந்தும்.



நெஞ்சு பொறுக்குதில்லை
இந்த அவலங்கள் கண்டு
அவலத்தோடு இணைந்து விட்ட
மானுட சமூகம் கண்டு
நெஞ்சு பொறுக்கதில்லை பராபரமே!

கவிஞர் சி.வே.முத்துச்செழியன் (எ) மு.வேதப்பிரிசி,மதுரை

# இவன்

பேச நினைப்பதெல்லாம்
எழுதுகிறான் - அவை,
எழுத்துப்பிழையும்
இலக்கணப்பிழையும் ஏறி
கருத்துப் பிழையாய்ப் போகிறது.
இவனது வாழ்க்கையைப் போலவே.



கவிஞர் கோ.தனுசன், மட்டக்களப்பு, இலங்கை

# முரண்பட்ட மனமே

ஒரு வார்த்தை சொல்லிவிட்டாய்
உயிரை வதைக்குதே
அந்த மழைப்பொழுதின்
மயக்கத்தை மறந்த மனமே

நனைந்த நினைவுகளை
நாள் கடத்திச் சென்றதோ
சிற்பமாய் இறுகித் தவிப்பில்
தள்ளி விடுகிறாய்

விடியாத பொழுதில்
உன் மூச்சுக் காற்றின்
வெப்பத்தை ரசிப்பதற்குள்
விழி திறந்து விடுகிறாயே

உன்னை விரும்பும் மனதை
உன்னை மட்டுமே விரும்பும்
மனதை உணராமலே
வெந்து தணிகிறாய்

என் காதல் பொய்யன்ற
குற்றச் சாட்டை வைப்பதில்
என்ன கண்டாயோ

வலிக்கத்தான் செய்கிறது
உன் விலகலின் வில்லங்கத்தை நினைத்து
விடாது கைக்கோர்க்கிறாய்
எதை பறைசாற்ற என தெரியாது
விழிமணிகள் விம்முகிறது
போதும் இந்நொடிகளின் இனிமைகள்

தள்ளி வைக்காமல் தோள் சாய்த்தப் பொழுதில்
மனம் தேற்றிக் கொண்டதடா



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# உன் பாதம்

உன் பாதம் பட்ட மண்ணும்
மகிழ்ச்சியின் மயக்கத்தில்
மீண்டும் உன் பாதம் படும் என!



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

அகர முதல

# பெண்களின் பருவ அறைகள்

நுகமது கருவாகி
கச்சிதமாய் குடமாகி
பத்துமாத பரிதவிப்பில்
பக்குவமாய் படுத்துறங்கும்
பெண்களின் முதல் அறைதான்
தன் தாயின் கருவறையோ.

வருடங்கள் பாய்ந்தோடி
விருட்சமாய் அரும்பி நின்றவள்
வயிற்றைப் பொத்தி வாயிறுக்கி
வயதுக்கு வந்து முடங்கிவிட்டாள்
வாயில்லா தனி அறையில்.

மனம் பறித்து மனங்கொடுத்து
மனக்கணக்கால் மணமுடிக்க
மணப்பெண்ணாய் மாணாளனுக்காய்.
மயக்கத்துடன் காத்திருக்கிறாள் மணவறையில்.

கல்லானாலும் கொண்டவனென்றும்
புல்லானாலும் புருசன் என்றும்
கரம் பிடிக்க தவமிருப்பாள்
கண் கண்ட தெய்வமாய் கணவரை.

பாங்கியாக வந்தவள்
பலருக்கு பசி தீர்த்தவள்
பாசத்திற்கு ஏங்கி பணையமாய் நிற்கின்றாள்
பிள்ளை தன் அறை வெளியே.

சாகசங்கள் பல புரிய
சாமானியனாய் வளர்ந்தவள்
சரித்திரங்கள் பல மாற்ற
சட்டம் பல கற்றவள்.
சட்டி பானை முட்டியென
முடங்கி விட்டால் சமையல் அறையில்.



வீடு எனும் விவாத மேடையிலே
வித்தியாசமான வழக்குகள் பல நிகழும்.
தனக்கென அவள் கதைத்திட்டால்
பெண்ணாய் பிறந்த பாவத்தின் தீர்ப்பு
கன்னத்தில் விழும் அறை தானோ.

காணும் இந்த காலமென
காலனின் காலடி வேண்டி
கவிக்காவியம் கருங்காவியமாய்
கண் மூடி துயிலுகிறாள் அவள் கல்லறையில்
அக்கறை என்ற பேரில் சக்கரையை உருக்காதீர்.

கவிஞர் பி. வூட்ஷன், முல்லைத்தீவு (இலங்கை)

# ஆதி விதை

மரங்கள்
அவ்வப்போது
உரையாடல்களை கூட
நிறுத்தி விடுகின்றன
குயில்களின்
இசைக்காக

விலங்குகளோ
பறவைகளோ
நனைந்து கொண்டே
இருக்கின்றன
சொந்த தேச
சுதந்திர தாகத்தின்
பெருமழையில்

நிலங்களிலிருந்து
பிடுங்கிய காடுகள்
போன்சாயாக
பால்கனி
நிறைகின்றன

ஆதி விதையின்
அதிசயங்கள்
அப்படியே
இருந்துவிட்டு
போகட்டும்
காடுகளாகவே



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# என் தங்கை

நான் தேடும் திரவம் - நீ
நீ தூவும் புன்னகையே
என் வீட்டு தேவதை - நீ
முத்தான உன் வார்த்தை
சொத்தாகி போகிறது
என் வீட்டு ராசாத்தி - நீ
தினம் தூங்கையில்
சிரிப்பு சத்தத்தில்
சிந்தனை பிறக்குதே
தாலி நடக்கையில் - நீ
தாளம் போடுதே
முத்தம் தருகையில் - நீ
உடல் குளிராகிறது
ஆரியத்தில் கூத்தாடி - நீ
காரியத்தில் கண்ணாகி
வேண்டியதை வாங்கிவிடும்
வண்ணச் சிறுமி - நீ
விருப்பமான உணவுகளை
விரும்பி கேட்ட நொடி
மறுக்காமல் தந்துவிட்டு
மகிழ்ச்சியாய் பார்த்திருப்பேன்
பாசாங்கு பல காட்டி - நீ
பாத்திரங்கள் பல செய்து
வாயில் ஊற்ற வேண்டும்
வைத்தியர் மருந்து
உன் சிரிப்பில்
என் வலிகள் மறையுதே



கவிஞர் முஹம்மட் அரூஸ் பாத்திமா றிஸ்னா, அக்குறணை

# மார்கழி மாத சிறப்புகள்

மார்கழி மாதம்  தனுர் மாதமாகுமாம்
கிருஷ்ணர் மகாபாரத யுத்தத்தில்
அர்ஜு¬னனுக்கு கீதையில்
மாதத்தில் நான் மார்கழி
மரத்திலே நான் அரச மரமாம் என்றருளினார்.

பக்தி மார்க்கத்தில் விடியல் பொழுதில்
ஆண்டவனைத் தொழுதால்
ஐஸ்வரியமும் ஆரோக்கியமும் பெருகுமாம்!
தேவலோகத்தில் வாழும் தேவர்களுக்கு
தை முதல் ஆனி மாதம் முடிய பகற்பொழுது ஆகுமாம்.
ஆடி முதல் மார்கழி வரை இரவு பொழுதாகுமாம்
விடியல் பொழுது மார்கழி மாதமாய்  நாளொன்றாகுமாம்

மாணிக்கவாசகப் பெருமான்,
"போற்றி யாம் வந்தோம் மார்கழி
நீர் ஆடலோர் எம்பாவாய்" என்று
திருவெம்பாவையில் பாடியருளியிருக்கிறார்.

ஏழாம் நூற்றாண்டில் துளசி வனத்தில்
அவதரித்த ஆண்டாள்
நாச்சியார் திருப்பாவையை 30 நாளும்
தோழியரோடு மார்கழி நீராடி
அந்த மாதவனே மணாளனாக நினைத்து
விரதம் இருந்து மணந்தாள்.

மார்கழி மாதம் விடியற்காலைப் பொழுது
உஷத் காலம் என்பர்.
அறிவியல் படி ஓசோன் படலம் மார்கழி மாதத்தில்
நாலு முப்பது முதல் ஆறு மணி வரை உளதே.
இக்காலத்தில் நாம் சுவாசிக்க ,சுவாசிக்க
நம் உடலும் மனமும் புத்துணர்வு அடையுமே!



கவிஞர் ஆ.கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# மனித உருவில் தெய்வம்

உண்மை உழைப்பு நேர்மையும்
திகட்டாத உழைப்பும்
எந்நாளும் சிகரத்தில் ஏற்றி வைக்கும் காலமே.

கடவுளுக்கு நிகரான கருணை உள்ளம் படைத்திட்ட
இறக்க குணம் மனிதனை மகனாக்கும் காலமே.

வாழ்விலே *அறமும்* கொள்கையிலே
*உறுதியும்* நெஞ்சிலே *உண்மையும்*
முடிவெடுக்கும் திறனும் அமையப்பெற்ற மனிதனே
எஃகு கோட்டையாய் வாழ்விலே
உயர்ந்து நிற்பான் உண்மையாய்.

பசித்திட்ட வயிறுதனை கண்டிட்ட கண்களும்
கசிந்திடும் உள்ளமும்.. *பசி தீ* அணைத்திடும்
கருணை மனம் படைத்தவன் மனித உருவில் தெய்வமே.

*முன்னத்தி ஏர் போல வாழ்ந்து மறைந்த பெரியோர்களின்
வாழ்வியலை பின்பற்றும் மனிதனென்றும்
நேர்மையாய் வாழ்வர் என்பது உண்மையை.

*தென்னை மரத்து மட்டை* கூட விழுந்தாலும்
முகவரியாய் தடம் பதிக்கும் என்றுமே.

தடம் மாற நேர் வழியில் வாழும் மனிதன் என்றுமே
எதிர்கால தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக இருப்பதுவே
வரும் தலைமுறைக்கு நாம் செய்யும் ஆகச் சிறந்த சேவையை.



கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு

# கண்ணாளனே!

கடிவளமாக பயணிக்கும் வாழ்விலே
கண்டிடும் காட்சியுமே
கனிசமாய் மாறிடுமே
கண்முன்னே கலையழகாய்
கண்ணிமைக்காமல் களித்திடலாம்
கதறியழும்போதும் கண்ணருகில்
கண்காட்சி பொருளாகாமலே
கண்மணியிரண்டிலும்
கச்சிதமாக சந்தோஷத்தையும்
கரத்திலும் பிடித்திடவே
கடைக்கண்பார்வையையும்
கதியென்று வந்தவளும்
கண்ணீரில் நனையவும்
கட்டியவனே காரணியென்று
கடும் வலிகளுக்கிடையே
கல்யாணம் செய்ததுமே
கஷ்டங்களும்,கவலைகளும்
கவிதையாக ஏந்திடவா?
கடைக்கண்பார்வைக்கு காத்திருந்ததும்
கரம்பிடித்ததுமே
கள்ளகபடமற்ற வாழ்வில் நுழைந்ததுமே
கடுந்துயரை கவனிக்காமலே?
கடமையை கவனிக்கசென்றாயே
கண்ணாளனே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# ஞாபகங்கள்

சில நேரங்களில் சுவாரஸ்யம்
சில நேரங்களில் வெறுப்பு!

சில நேரங்களில் புன்னகையாம்
சில நேரங்களில் கோபமாம்!

சில நேரங்களில் அன்பாம்
சில நேரங்களில் குரோதமாம்!

சில நேரங்களில் வரமாம்
சில நேரங்களில் சாபமாம்!

சில நேரங்களில் துக்கமாம்
சில நேரங்களில் மகிழ்ச்சியுமாய்!

கொடுத்து விட்டு சென்று விடுகிறதே
இந்த ஞாபகங்கள்!

நல்லனவற்றை எடுத்து
தீயனவற்றை விடுத்து
அன்புடனே வாழ்வாங்கு வாழ்ந்திடுவோம்!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# காட்டு மல்லி பூக்குதே

காட்டு மல்லி கலையாய்ப் பூக்குதே
வாட்டும் மனதில் வசந்தம் வீசுதே!

என்னுள் எண்ணங்கள்
எழிலாய் மலருதே
தேன்தமிழ் அமுதாய்
தெவிட்டாமல் ஆளுதே!

காதல் கீதங்கள்
கருத்தாய் இசைக்குதே
மோதல் கொண்டாலும்
மெழுகாய் உருகுதே!

ஒதுங்கி நீசெல்கையில்
உயிரைக் கொல்லுதே
சாதுவான யென்மனம்
சங்கடம் ஆகுதே!

கண்களும் காவியம்
கனவுகளோடு பேசுதே
மண்ணில் மறையும் வரை
மறக்காது நிலைக்குமே!

சோகத்தைத் தாங்கியும்
சொர்க்கமாய் நினைக்குதே
தாகத்தில் உன்னைத்தான்
தழுவிடத் தேடுதே!



கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி

# கொண்டாட்டம்


மக்களிடையே டெங்கு காய்ச்சலை
பரப்பிய சந்தோஷத்தை
கொண்டாடும் வகையில்
கொசுக்கள் வயலின் வாசிக்க
கூத்தாடி புழுக்கள் நடனமாடியது
தேங்கி நிற்கும் கழிவு நீரில்

"வேடிக்கை பார்க்கும் சர்கார்"



கவிஞர் விக்னேஷ். கு, வேலூர்

கோதைதன் நம்பிக்கை: யாவரையும் காத்திடுவார்
எம்பெருமான் எனும்வார்த்தை மற்றுமவள் பெரியாழ்வார்
உறவென்பதும் பயனிலதாய் நொந்தனளே! சுதந்திரனவன்
என்பதனால் குருவாகி வளர்ப்பித்தவர் பெரியாழ்வார்
மூலமாக அடைமுயற்சி வென்றிலதே! நம்பினாரை
காக்காவிடில் பெயர்கெடுமே! காத்திடவே முன்வரினே
தடுத்திடுவார் யாவருளர்? என்பதனால் சுயமுயற்சி
கொண்டனளே! பாசமதும் பொறுமையும் அவன்வரவை
சேர்த்திலதே! சார்ந்திருந்து சேவைசெய அவனிடத்தே
தன்னையே சேர்த்திடுங்கள் எனவேண்டல் வைத்தனளே!
மற்றிருந்தீர் கட்கெல்லாம் அறியலாகா மாதவனாம்
அன்புதனை உற்றிருந்த கோதையவள் காதினுக்கு
உரைப்பதெலாம் செவிடூமை பேச்சாகும்! பிறந்தயிரவே
மற்றில்லில் வளர்ந்தமகன் இருக்குமிடம் சேர்த்திடவே
வேண்டுகிறாள் முதலாவது பாசுரத்தே! இரண்டாவது
பாசுரத்தே அயலவர்கள் அறிந்தபினே நாணுவதால்
ஏதுபயன்? இணையுமுனே பிரிவுத்துயர் காணுமுன்பு
அறியாத நிலையினிலே ஆய்ப்பாடி கொண்டுசெலில்
வாமனனே நோய்தீர்ப்பான் என்றுரைத்தாள்!மூன்றாவது
பாசுரத்தே செயலற்புதம் கொண்டகண்ணன் வடிவுகாட்டி
ஈர்க்கின்றான் என்றுரைத்தாள் கோதையவள்!நள்ளிரவில்
மாதரொடு குறும்பிழைத்த அவன்முன்னே உய்த்திடுங்கள்
என்றவுரை சாற்றினளே! நான்காவது பாசுரத்தே
ஆழிகொண்டான் முகத்தன்றி விழியேனென என்கொங்கை
கோவிந்தன் தனக்கேயென யமுனைக்கரை சேர்த்திடவே
வேண்டுவளே! ஐந்தாவது பாசுரத்தே தன்னோயை
அறிந்திடுதல் யார்க்குமரிது! கார்க்கடலான் கைதடவ
தீருமென மரவுச்சி நடம்பயின்ற நேயனொடு
பொய்கைதன் கரைதன்னில் சேர்த்திடவே கோருகிறாள்!
கோதைதமிழ் முதலைந்தே! மற்றைந்து தொடர்ந்திடுமே!





கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# வரப்புயர!

வானின் கொடையாக வந்தது மழைநீரும்!
தானாக நிரம்பியதே ஏரி குளங்களெலாம்!
வீணர்கள் நாணும்வகை உழைக்கின்றோம் வயல்களிலே!
வறண்டிருந்த நிலங்களிலே வாய்ப்பாச்சு உழவுசெய்ய!
சிறுதூறல் பெருமழையின் துவக்கம் என்பதுபோல்
சிறுநாற்றே பெருவிளைச்சல் தந்திடும் பயிராகும்!
பருவத்தில் பயிர்செய்தால் உரியபயன் தந்திடுமே!
தூறலின் வாழ்த்துடனே தொடங்கிட்டோம் நடவினையே!
குடைபிடித்துக் குனிந்ததனால் தெரியாது எங்கள்முகம்!
முகமறியா எத்தனையோ மனிதர்களின் உழைப்பால்தான்
சகத்தின் பசி தீர்ந்திடுதே! உழவுத்தொழிலினை
அகமகிழ்ந்து செய்கின்றோம்! உழுபவன் கணக்கிட்டால்
உழக்குகூட மிஞ்சாதே! மழையின்றி உழவில்லை!
உழவின்றி உலகில்லை! மழையும், உழவும்
நிலமும் நற்பயிரும் எந்நாளும் சிறந்தோங்க
இயற்கையை வணங்குவமே! வரப்புயர வாழ்த்துவமே!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# தாய்மை

அதி புனித உறவாம் தாய்மையாம்
அன்னை இல்லையெனில் மனித இனமேயில்லையே
இறைவன் அளித்த பெரும் கொடையதாம்
உலகில் உன்னத உறவாம் தாயாம்
உணர்வின்றி மனிதனில்லை அது போன்றே
அற்புதத் தாயே நீயின்றி நானில்லை
நல்லெண்ணத்தை நம்முள் விதையாய் விதைத்து
தீயெண்னத்தை அன்பால் முற்றாய் அளித்து
ஒளிவிளக்காய் நம் வாழ்வை மாற்றியவள்
தியாகத்தின் மறுஉருவம் பாசத்தின் அடையாளமவள்
பிறக்க முதலே முதற் காதலியானவள்
பிறந்ததும் நமக்கே அடிமையாய் வாழ்பவள்
தன்னுதிரத்தை பாலாக்கி வழங்கும் தியாகப்பெண்
ஆராரோ சொல்லி அழுகை அடக்கியவள்
நிலா நிலா பாடி உணவூட்டியவள்
நம் தவறையும் அன்பால் திருத்தியவள்
பஞ்சு மெத்தையில் கிடைக்காத சுகம்
கிடைத்திடுமே இனிதாய் தாய் மடியினில்
தன்னைப் பற்றி சிந்திக்க மறந்தவள்
இரவு பகல் நமக்காய் சிந்திப்பவள்
வயதானாலும் நமக்காய் என்றும் வாழ்பவள்
உலகில் விலையில்லா ஒன்று தாயன்பு
உலகிலே சுயநலமில்லா அன்பே தாயன்பு
வருடங்கள் கடக்க காயங்கள் ஆறிவிடலாம்
கற்பனைகள் திசை அறியாமல் மாறிப்பேகலாம்
என்றும் மாறாத அன்பு தாயன்பே
உலகை ஆளும் என் இறைவனே
அதி அற்புத வரமொன்று வேண்டுமே
விண்ணுலக வாழ்விலும் தாய் மடியில்
தலை வைத்து தூங்கும் பாக்கியமே



கவிஞர் ரஸ்னா ரம்ஸான், அக்குறணை, கண்டி (இலங்கை)

# நினைவுகள் சுடுகிறதே



கலைந்திடாத கனாக்கள் கண்ட நாள் முதலே
வெற்றிகளை பெற்றிட என்னில் உரம் சேர்த்த ஒலிகள்
கருவறையில் இடம் தந்த கருணை மனம் கொண்ட அன்னையவள்
திசையறியா நான் அசைந்த பொழுதுகளில் வந்த ரணங்களை
கண்ணீரின்றி இதழ் மலர்ந்து குதூகழித்து.
மறு பிறப்பாய் எலும்புகளே முறிந்திடும் பிரசவ வலிகளை பொறுத்து
பரந்த பாரினில் என்னை ஈன்றவள்.

சுமை பாராது சுகமாய் நெஞ்சினில் சுமந்த எந்தையோ.
தன் வலிகளை மறைத்து பூமுகம் பூத்த வன்னமே
அன்பை பஞ்சமின்றி சாரலாக தூவி.
மனவலிமையை புகுத்தி வெற்றியின் ரகசியங்களை
நடைப் பழகும் நாள் முதலே பாடமாக போதித்து.
இன்நிலை நான் காண தன் துயர் துடைத்த ஆத்ம நெஞ்சங்கள்
முதலில் என் முகம் கண்டு மலர்ந்த தன் முகத்தை
இறுதியில் பார்க்கும் கொடுப்பினையின்றி
ஆழியலையோடு சங்கமித்தது
அன்பு எம்மான் உடலோடு உயிரும்.

தன் மடியில் எனை சாய்த்து
மார்வலி பாராது என் பசி நீங்க
பாலூட்டி தாலாட்டி சீராக வளர்த்த அன்னையவள்
இறுதி சுவாசம்.
என் மடியில் அடங்கிய தருணம்.
நினைக்கும் பொழுதினிலே
கொதிக்கும் கொப்பரையிலே துடிக்கிது என் நெஞ்சம்.
வெடிக்கிது என் கண்கள்.
பிறப்பின் பயனை பெற்றார் இன்றி கழிக்கும்
இந்த அபளை மனதின் நினைவுகள் சுடுகிறதே.

விடை தேடி அலையும் இந்த ஆத்மாவின் கண்களில்
தடையின்றி பெருக்கெடுத்தோடும் கண்ணீருக்கு
அணைப்போடுவது யாரோ?
தட்டிக்கொடுக்கும் துணையே வசைப்புகழ் பாட
தோள் கொடுக்க துணையின்றி
துயர் துடைக்க உறவின்றி.
உணர்வுகள் உயிரோடு சுட்டெரிக்கப்படும்
அநீதியின் பிறப்புக்கு முற்றுப்புள்ளி எப்போது?

கவிஞர் அமீன்பவாஸ்

# சடங்காய்

இதுதான்
முடிவு
தெரிவு
எண்ணம் கண்டபின்

எதிர்மனிதர் இதைத்தான்
சொல்லபோகிறார் என
முன் அனுமானம்
கண்டபின்

உங்க கருத்து என
கேட்பது
சடங்காய்



கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# காதல் இல்லாக் காதல் – ஹைக்கூக்கள்

உன் நேசம் கைவிலங்கு
அறுத்தாலும் எங்கும்
ஆறாது ரணம்
*

என்ன செய்யும் மரணம்
உன்னிடம் தொலைந்தபின்
என் மனதைச் சுமக்கும் உடலை.
*

மலர் சூடுவாய்
வாடும் மனம்
எனைச் சூடுவாயா?
*

அதே எழுத்து அதே கடிதம்
எத்தனை வாசிப்பு
உன் முகம் தெரியுமே!
*

மலர்களைப் பறிக்கையில்
நீ சிரிக்கிறாய்
முத்தமிடவா மூச்சுவிடவா.
*

உதடுகளில் மறுப்பு
உள்ளத்தில் ஏக்கம்
எனைக் கண்ட உன் முகம்
*

எதைக் கேட்பது
என்னைத் தொலைத்து
உன் மனதிடம்.
*

சொல்ல நினைத்ததும்
நம் உதடுகளில்
உதிர்கிறது ஒரே சொல்



கவிஞர் இளையவன் சிவா

அனைத்தும் ஒரு நந்நாளில் முடியும்
மனிதன் மட்டுமே மீதமிருப்பான்
இருந்தும் பயனில்லை : உணர்வான்.

***

சிலருக்கு
முகம் முழுக்க புன்னகை
ஆனால் வாய் சிறிது தான்
***
மின் வெட்டு இரவு போன்ற
மன அமைதி
வேண்டும்
***
தன் கண்ணீரை துடைப்பதும்
தன் கைதான் என்பது
அவலமோ அவலம்
***
ஒரு நாள்,
சாகும் காலம்
சாயங்காலம்
***
வீடு உள்ளே சென்றபின்
ஊடு
என்றானதோ ?



கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன்

பழனி சரியாக குறிபார்த்துச் சுட்ட போதிலும் அருகில் இருந்தவர் பையில் கை விட்டு கர்ச்சீப் எடுக்க முயல அவனுடைய கையில் துப்பாக்கிப்பட்டு குறி தவறி பிஸ்டலிலிருந்த இரண்டு குண்டுகளும் சீறிப்பாய்ந்து மேடையிலிருந்த காலி நாற்காலியின் பஞ்சுகளை பிய்த்தெறிந்து விட்டு புகை விட்டன.

மத்திய இணை அமைச்சர் வலம்புரி மாதவனைச் சுற்றி கட்சித்தொண்டர்களும் போலீஸ்காரர்களும் பாதுகாப்பு வளையம் அமைத்து அவரை காரில் ஏற்றிவிட, மற்ற ஒரு போலீஸ் குழு துப்பாக்கிக் குண்டு வந்த பக்கம் நோக்கி வேகமாக பாய்ந்து வந்தது.

கையிலிருந்த துப்பாக்கியை அருகிலிருந்த கிளையில் வைத்த பழனி வேகமாக மரத்தை விட்டு இரங்கி கூட்டத்தில் கலந்துவிட, மரத்திலிருந்த மற்றவர்களை போலீஸ் சூழ்ந்து கொண்டது.

எதிர்ப்பார்க்காமல் குறி தவறி விட்டதே சே! எவ்வளவு மடத்தனம். கொஞ்சம் கவனமாக இருந்திருந்தால் பக்கத்தில் இருந்தவன் கை தட்டுப்படாமல் இருந்திருந்தால் குண்டுகள் அமைச்சரின் மார்பில் பாய்ந்திருக்கும்.

பரவாயில்லை. இந்த மந்திரியை நான் கொல்லாமல் விடப் போவதில்லை. முதலில் இங்கிருந்து தப்பிக்க வேண்டும். "ஓடலாமா"? என்று நினைத்தான்பழனி. உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. 'ம்கூம்..ஓடக்கூடாது.' ஓடினால் கண்டிப்பாக சந்தேகம் வரும். கூட்டத்தோடு கூட்டமாக மெதுவாக முன்னேறி வெளியே போய்விடலாம் என்று எண்ணியவாறு எச்சரிக்கையாக கிளம்பினான்.

காலையில் 'ஆதவன்' தினசரியில் பெரியஎ முத்துகளில் ''மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு வலம்புரி மாதவன் அவர்களை கொல்ல சதி. அதிர்ஷ்ட வசமாக தப்பி விட்டார்.

துப்பாக்கியால் சுட முயன்ற கொலையாளி தலை மறையு. போலீசார் கொலை செய்ய முயன்றவனை வலை போட்டுத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.'' என்று சப்தமிட்டு வாசித்துக் கொண்டிருந்தான் தங்கபாலு.

தூக்கம் வராமல் இரவு முழுவதும் கண்விழித்தபடியே இருந்த பழனி, ''தங்கபாலு நான் வந்த வேலை முடியாமல் போச்சு. நான் இன்றைக்கு சாயங்காலம் வீட்டிற்கு கிளம்புகிறேன்.'' என்றான்.

''நீ எங்கே வந்தேன்னாலும் சரி, எங்கே போறேன்னாலும் சரி ஒண்ணுமே சரியாக பதில் சொல்லமாட்டேன் என்கிறாய். அதுசரி. நீ ஊருக்குதானே போகிறாய்.? அங்கே போய் நாங்கள் இருப்பதை யார் கிட்டயும் சொல்லிறாத.'' என்றான் தங்கபாலு.

அவன் பேசுவதை சுவாரசியமாக கேட்ட பழனியின் கண்கள் தங்கபாலுவின் கையிலிருந்த பேப்பரில் கடைசி பக்க முழு விளம்பரத்தை வாசிக்க ஆரம்பித்தது.

தமிழ் மக்கள் வளர்ச்சி மன்றத்தின் முப்பெரும்விழா. மூன்றாமாண்டு துவக்க விழா. தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா. புதியதாக மத்திய அமைச்சர் அவையில் பதவியேற்ற அன்பு அண்ணன் மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு வலம்புரி மாதவனுக்குப் பாராட்டு விழா.

நாள் 19.03.1997 நேரம் மாலை 8 மணி. இடம் காமராஜர் பள்ளி வளாகம், தாராவி மும்பை. என்று போட்டிருந்ததப் பார்த்ததும் ''தங்கபாலு எனக்கு பம்பாயில் கொஞ்சம் வேலை இருக்கு. அது முடிஞ்ச பிறகு தான் ஊருக்குப் போவேன்.'' என்ற பழனி தன் மனதிற்குள் இன்னும் நான்கு நாட்கள் தானிருக்கிறது. இன்றே பம்பாய்க்குக்கிளம்பவேண்டும். என்று முடிவு செய்து கொண்டு தன் துணி மணிகளை எடுத்து சூட்கேஸில் வைக்க ஆரம்பித்தான்.


தங்கபாலு பேப்பர் வாசித்துக் கொண்டிருப்பதை கவனித்த கோமதி அவனருகில் வந்து தலைப்பு செய்தியை வாசித்து விட்டு ''பழனி சூட்கேஸிலே துப்பாக்கி பார்த்தேன் என்று சொன்னீர்களே அவர் நேற்று கீழ்ப்பாக்கம் போவதாகத் தான் சொன்னார். ஒண்ணு கிடக்க ஒண்ணு அவர் தான் தப்புப் பண்ணிருப்பாரோ.'' என்று கேட்டாள்.

தன் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள தங்கபாலு பழனியிடம் வந்து ''எங்கே நீ வைத்திருந்த துப்பாக்கியை காட்டு.'' என்றான்.

''எதற்கு?'' , ''காட்டேன் அப்புறம் சொல்றேன்.'' என்ற போது கூடவே கோமதியும் எட்டிப் பார்த்தாள்.

சூட்கேஸை திறந்த பழனி அதிலிருந்த பிஸ்டலை எடுத்துக்காட்டி விட்டு ''என்ன தங்கபாலு திடீர் சந்தேகம்.'' என்றான் கோமதியைப் பார்த்தவாறு.

''ஒன்றுமில்லை.'' என்று தங்கபாலுவும் கோமதியும் கிளம்ப, 'நல்லவேளை இரண்டு பிஸ்டல் கொண்டு வந்தது இங்கேயும் நமக்கு உதவுகிறது' என்று எண்ணியவாறு புறப்பட ஆயத்தமானான்.



# உலகம் பிறந்தது உனக்காக

## நூல் அனுபவம் (கவிதைப்பூங்கா)




உலகம் பிறந்தது உனக்காக...!?" (கவிதைப்பூங்கா) என்னும் கவிதை நூலைத் தேடிய அன்பு வாசகருக்கு, கனவுகளைத் தேடிய நேசத்திற்கு "ஒரு கவிதை என்பது எழுச்சி தருவது. ஒரு கவிதை என்பது மாற்றம் தருவது. ஒரு கவிதை என்பது சுகந்தம் தருவது. ஒரு கவிதை என்பது இதயத்தில் மயிலறகின் தடவல் தருவது. ஒரு கவிதை என்பது இயல்பு நிலையிருலிருந்து புதிய புத்துணர்வின் மாற்றம் தருவது. ஒரு கவிதை என்பது விடியல் தருவது. ஒரு கவிதை என்பது உன்னைத் தட்டி எழுப்பி உற்சாகம் தருவது.

ஒரு கவிதை என்பது உன்னிடம் உன்னையே தருவது, எனக் கவிதை என்றால் என்னவென்று ஒவ்வொருத்தரும் ஒவ்வொன்றாய் சொல்லி விட்டுப் போக "கவிதை எனபது ஒரு அழகிய காட்சியில் மயங்கிப்போவது..." என்பது என் எண்ணம். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

இக்கவிஞர் ஒரு புதிய பாரதியாகவே, இக்காலப் பாரதியாகவே காட்சி தருகின்றார். இவரது இப்பாடல் தொகுப்பிற்கு அணிந்துரை எழுதக்கிடைத்த வாய்ப்பைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். "இவர் இன்றைய பாரதியே" எனக் கூறி மகிழ்வுறுகிறேன்.

திரு அந்தோணி ஜேம்ஸ் பெர்லாமின்

# மணி திருநாவுக்கரசு

## கட்டுரை

### பிறப்பு, கல்வி



செங்கல்பட்டு மாவட்டம், மணிமங்கலம் என்னும் ஊரைச் சேர்ந்த சுந்தர முதலியார்- வேதவல்லி இணையருக்கு 1888-ல் பிறந்தார். செங்கல்பட்டு நேட்டிவ் உயர்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை கற்றார். சென்னை தொண்டைமண்டல உயர்நிலைப் பாடசாலையில் பத்தாம் வகுப்பு வரை பயின்றார்.

அங்கே தமிழ் கற்பித்த சிவப்பிரகாச ஐயரிடமிருந்து தமிழார்வத்தை அடைந்தார். பூவை கலியாணசுந்தர முதலியார், மறைமலையடிகள் ஆகியோரிடம் கல்விகற்றார்.

### தனிவாழ்க்கை

மணி திருநாவுக்கரசு நவநீதம் அம்மையாரை மணந்தார். இளமையிலேயே நவநீதம் மறையவே வாலாஜாப்பேட்டை கனகசுந்தர முதலியார் மகள் சரஸ்வதியை மணந்தார். அவருடைய மகன் சபாரத்தினம் கல்வியாளர். மற்றும் நான்கு மகள்கள் அவருக்கு பிறந்தனர். தொடக்கத்தில் ஜி.ஏ.நடேசன் புத்தகக்கடையில் கணக்குப்பிள்ளையாகப் பணியாற்றினார். பின்னர் குமாரசாமி நாயிடு அச்சகத்தில் பிழைதிருத்துநர் பணி செய்தார்.

# மணி திருநாவுக்கரசு

## கட்டுரை

வேப்பேரி எஸ்.பி.ஜி.உயர்தரப்பாடசாலையில் தமிழாசிரியராக பணிகிடைத்தது. பின்னர் முத்தியால்பேட்டை தமிழ்ப்பள்ளி தமிழாசிரியராகப் பணியாற்றினார். இறுதியாக பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக ஆனார்.

### இலக்கியவாழ்க்கை

மணி திருநாவுக்கரசு சைவம் சார்ந்தும் தமிழிலக்கியம் சார்ந்தும் சொற்பொழிவுகள் ஆற்றினார். நூல்களை உரையெழுதி பதிப்பித்தார்.நூல்களைத் தொகுத்தார். கல்லூரியிலும் தன் இல்லத்திலும் தமிழ் வகுப்புகளை நடத்தி மாணவர்களுக்குக் கற்பித்தார். மணி திருநாவுக்கரசு திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பதிப்புகளில் ஆசிரியராக பணியாற்றினார். சேலை சகதேவ முதலியார் முதலியோரை கொண்டு தமிழ்ப்பாடநூல்களை எழுதச்செய்து வெளியிட்டார். மணி திருநாவுக்கரசு தனித்தமிழ் இயக்க ஆதரவாளர்.

### ஆர்?

"உலகுக்கெல்லாம் நல்லவனே" என்ற தலைப்பில் இவர தி இயற்றியுள்ள ஒரு சிறிய குழந்தைப்பாடல் இவருடைய எழுத்து இ வல்லமைக்குச் சாட்சியாகத் திகழ்கிறது.

பூவே உன்னைப் படைத்தவர் ஆர்?<br>
புதுமணம் உள்ளே நுழைத்தவர் ஆர்?<br>
பல பல நிறங்கள் பண்ணவர் ஆர்?<br>
பார்க்க அழகு தந்தவர் ஆர்?

திரு அ வில்சன், இதழாசிரியர்

உன்னைச் செய்தோன் வல்லவனே
உலகுக் கெல்லாம் நல்லவனே

தனக்குத் தோன்றும் சந்தேகங்களை பூவிடமே கேள்வியாகக் கேட்கும்படியாக இந்தக் குழந்தைப் பாடலை இவர் இயற்றியுள்ளார். ஒரு பூவிற்கு உரித்தான மணம், வண்ணம், அழகு போன்றவற்றைச் சொல்லி அவற்றை உண்டாக்கியவர் யார் என்று கேள்வியையும் கேட்கும்படியாகச் செய்கிறார். கேள்வியே
ஞானத்தை வளர்க்கும். அறிவைப் பெருக்கும்.

### அமைப்புகள்

சைவத்தையும் தமிழையும் பரப்பும்பொருட்டு மணி திருநாவுக்கரசு உருவாக்கிய அமைப்புகள்

பாலசைவர் சபை
வாகீசர் சபை
மாணிக்கவாசகர் சபை
இந்துமத பாடசாலை
சித்தாந்த பிரகாச சபை
தமிழர் சங்கம்

### இதழியல்

மணி திருநாவுக்கரசு திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துடன் இணைந்து செந்தமிழ்ச் செல்வி இதழின் உருவாக்கத்திலும் வெளியீட்டிலும் ஈடுபட்டார்.


திரு அ வில்சன், இதழாசிரியர்

மாசிலாமணி முதலியாருடன் இணைந்து 'தமிழரசு' இதழை நடத்தினார்

## இலக்கிய இடம்

மணி திருநாவுக்கரசு தமிழ்க்கல்வி, தமிழ்வழிக்கல்வி ஆகியவற்றுக்கான பாடநூல்களை உருவாக்கியவர் என்னும் அளவில் முதன்மையாக மதிக்கப்படுகிறார்.

## நூல்கள்




பாவலர் ஆற்றுப் படை
அறநெறி விளக்கம்
புலவர் கதை
திருக்கண்ணப்பன்
குமணன்
இராசராசன்
சண்பகவல்லி
செந்தமிழ் வாசகம்
பட்டினத்துப் பிள்ளையார் அல்லது தவராசர் தொகுப்பு
பாமணிக் கோவை
உரைமணிக் கோவை

## நாளை நமதே

# வார்த்தையால் பேசுவதைவிட

# வாழ்ந்து காட்டுவதே

# சிறப்பு

அகமும் தமிழே    முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு    அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு    சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa    www.aagaramuthala.com    aagaramuthala@gmail.com